# திருக்குறள் காட்டும் அறிவியல் சிந்தனைகள்

தோ. ஷோபா கிறிஸ்டி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அருணாச்சலா மகளிர் பொறியியல் கல்லூரி,
மணவிளை, வெள்ளிச்சந்தை – 629 203.
மின்னஞ்சல் : shobac983@gmail.com

18

**ஆய்வுச்சுருக்கம்**

மருத்துவம் என்பது உடல் மற்றும் உளம் சார்ந்த நோய்களுக்கான தீர்வாக அமைகின்றது. இன்றைய மருத்துவ உலகம் அறிவியல் துணைகொண்டு வியத்தகு சாதனைகளைப் படைத்துவருகின்றது. ஆனால், அறிவியல் வளர்ச்சியடையாத பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய சமுதாயத்தின் பெரும்புலவர் வள்ளுவனார் நோய்கள் உண்டாகும் விதம் குறித்தும், மருத்துவத் துறைக் குறித்தும், மருத்துவம் செய்யும் முறை குறித்தும், நோய் வராமல் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்தும் கூறி, இன்றைய நவீன மருத்துவ துறைக்கு வழிகாட்டுகிறார் என்பதனை இக்கட்டுரை ஆராய்கிறது.

**முன்னுரை**

இன்று மனிதகுலம் அடைந்திருக்கும் மகத்தான வளர்ச்சியின் வித்தெல்லாம், பழஞ்சமுதாயத்தால் ஊன்றப்பட்டவையே. அறிவு வளர்ச்சியும் நாகரிக மாற்றமும் அடைந்துள்ள இன்றைய மனித சமுதாயம் திடீரென தோன்றிய ஒன்றல்ல அதற்கென ஒரு பரிணாம வளர்ச்சி காணப்படுகிறது. ஒன்றன் உருவாக்கத்திற்கு மற்றொன்று காரணமாக அமைந்திருக்கின்றது. படிப்படியான வளர்ச்சிப் போக்கிலேதான் இன்றைய மனித சமுதாயம் விஞ்ஞானம், அரசியல், வணிகம், வானியல், மருத்துவம், பொருளாதாரம் எனப் பல்வேறு துறைகளிலும் உயர்ந்து நிற்கின்றது. குறிப்பாக மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டால் மருத்துவ உலகின் விந்தையாகக் கருதப்படுகின்ற உயிரியல் படியெடுப்பு (cloning) முறை குறித்த சிந்தனையையும் சோதனைக்குழாய் (Test tube baby) முறை குறித்த சிந்தனையையும் மகாபாரதத்தில் கௌரவர்களின் பிறப்பின் மூலமாகவும் மாற்றுறுப்பு அறுவை சிகிட்சை குறித்த சிந்தனையைக் கண்ணப்ப நாயனார் புராணம் மூலமாகவும் கூறி நவீன மருத்துவ உலகினையே வியப்படைய வைத்தது நமது முன்னோரின் அறிவியல் சார்ந்த அறிவு என்பதனை மறுக்க முடியாது.

அந்த வகையில், மருத்துவம் சார்ந்த அறிவியல் சிந்தனை வள்ளுவன் குறளுக்குள்ளும் புதைந்து கிடப்பதைக் காணமுடிகிறது. “பழைய காலத்திலிருந்து மேதைகள் பலர் இயற்கையிலேயே அறிவியல் அணுகுமுறையைப் பயன்படுத்தும் சிந்தனை வளமும், தெளிவும்

பெற்றிருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த கால எல்லையைத் தாண்டி, மரபுகளையும் மீறி எதிர்காலத்திற்குள்ளும் ஊடுருவும் திறனோடு பிரச்சனைகளை அவர்கள் அணுக முடிந்தது. இந்தக் கூறுபாடு வள்ளுவர் குறளில் பரவியிருக்கிறது" என்று வா.செ. குழந்தைசாமி அவர்கள் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

**மருத்துவத்துறை**

மருத்துவம் என்பதற்கு 'நோய்களைக் கண்டுபிடிக்கவும், அவற்றைக் குணப்படுத்தவும் அவை வராமல் தடுக்கவும் உதவும் அறிவியல்' என்று விளக்கம் அளிக்கிறது ஆக்ஸ்போர்டு அகராதி. இப்படிப்பட்ட மருத்துவ நடைமுறைகளை மக்களுக்கு அளிக்கும் அறிவியல் துறையினை மருத்துவத் துறை என்கிறோம். பொதுவாக மருத்துவத்துறை சார்ந்த செயல்பாடுகளை ஆராய்ந்தால் நோயாளி, மருத்துவர், மருந்து, நோயாளியைக் கண்காணிப்பவன் என்னும் நான்கு கூறுகளை மட்டுமே உள்ளடக்கியிருப்பதைக் காணமுடிகிறது. இதனையே வள்ளுவர்,

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று
அப்பால்நால் கூற்றே மருந்து" (950)

என்னும் குறளின் வழியாகக் கூறுகிறார். இக்குறளுக்கு உரை செய்யும் போது பி.எஸ். ஆச்சார்யா அவர்கள் நோயுற்றவன், நோய்தீர்க்கும் மருத்துவன், நோயைப் போக்கவல்ல மருந்து, நோயாளியைக் கண்காணிப்பவன் என மருந்து நான்கு வகைகளை உடையதாகும் எனக்கூறுகிறார்.

**நோய் உண்டாகும் விதம்**

'முத்தாது' என்று தமிழ் சித்த மருத்துவத்திலும், 'த்ரீதோஷா' என்று ஆயுர்வேதத்திலும் கூறப்படும் வாதம், பித்தம், கபம் என்பவை சரியான முறையில் இருந்தால்தான் உடலின் இயக்கம் சீராக நடைபெறும். இவற்றில் எவையேனும் மிகுந்தோ, குறைந்தோ காணப்பட்டாலும் பல்வேறு விதமான நோய்கள் ஏற்படும் என்பது மருத்துவ அறிவியல். இதனைக் கூறும்போது வள்ளுவர்,

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" (941)

என்கிறார். வாதம் (வளி), பித்தம் (வெப்பம்), கபம் (நீர்த்துவம்) என்பவற்றையே வள்ளுவனார் 'வளிமுதலா எண்ணிய மூன்று' என்கிறார்.

தற்போதைய பல்வேறு ஆய்வு முடிவுகள் உணவு பழக்கத்திற்கும் நோய்க்கும் தொடர்பு இருப்பதனை உறுதி செய்கின்றன. மருத்துவர் கு. சிவராமன் அவர்கள் தனது வலையொலி மற்றும் புத்தகங்கள் வாயிலாக உணவினைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார். அந்த வகையில் 'மருந்தென வேண்டாவாம்' என்னும் தனது நூலில் நவீன உணவு முறையின்

தாக்கத்தையும் உடல்நலப் பிரச்சனைகளையும் விளக்குகிறார். எனவே உணவிற்கும் நோய்க்கும் தொடர்பு உண்டு என்பது தெளிவாகிறது.

“இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்” (946)

“தீயளவு அன்றித் தெரியான் பெரிதுஉண்ணின்
நோய்அளவு இன்றிப் படும்” (947)

என்னும் குறள்களின் வழி பசியின் அளவு அறியாமலும் ஆராயாமலும் அதிகம் உண்டால் நோய்களும் அளவின்றி வரும் என வள்ளுவனாரும் எச்சரிக்கிறார்.

**மருத்துவம் செய்யும் முறை**

நோயாளியின் நோயை அறிந்து அந்த நோய் உண்டாவதற்குரிய காரணத்தைக் கண்டறிந்து அந்த நோயைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து மருத்துவர், மருத்துவம் செய்ய வேண்டும் என்பதனை வள்ளுவர்,

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்” (948)

என்றும், மருத்துவ நூலைக் கற்ற மருத்துவன் ஒருவன் நோயுற்றவனுடைய வயது, நோயின் அளவு, நோயுற்ற காலம் ஆகியவற்றை ஆராய்ந்து அதற்கேற்ப மருத்துவம் செய்ய வேண்டும் என்பதை,

“உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்” (949)

என்றும் குறிப்பிடுகிறார்.

**தற்காப்பு முறை**

நோய்க்கான காரணத்தையும் மருத்துவ முறையையும் கூறிய வள்ளுவர் நோய் வராமல் தடுக்கும் வழிமுறையாக,

“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு” (945)

என்கிறார். உடலுக்கு ஒத்துவரக்கூடிய உணவாக இருந்தாலும் அளவாக உண்டால் உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய் ஏற்படாது என்பது அவரது கருத்தாகிறது.

உணவு சரியான முறையில் செரிமானம் ஆகாத நிலை பல்வேறு உடல்நலக் கோளாறுகளை உண்டாக்கும் என்பதால், அதுகுறித்து எச்சரிக்கும் வள்ளுவர்,

“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்” (942)

என்கிறார்.

**முடிவுரை**

ஆரோக்கியமான உணவு முறையானது அனைத்து விதமான ஊட்டச்சத்துக் குறைபாட்டிலிருந்தும், நீரிழிவு, இதயநோய், பக்கவாதம் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட தொற்றாத நோய்களிலிருந்தும் பாதுகாக்க உதவுகிறது என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) கூறுகிறது. இன்றைய பெரும்பாலான நோய்களுக்கு மூலாதாரமாக முறையற்ற உணவு பழக்கங்கள் காரணமாகின்றன என்னும் கருத்தை உலகநாடுகள் முன்வைக்கின்றன. உணவுப் பழக்கத்திற்கும் நோய்களுக்குமான தொடர்பு குறித்த இன்றைய தீவிரமான கருத்தியல்களை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிறார் உலகப் புகழ் வள்ளுவர்.

**துணைநூற்பட்டியல்**


1. வாழும் வள்ளுவம் வா.செ. குழந்தைசாமி, பாரதி பதிப்பகம், சென்னை.
2. மருந்தென வேண்டாவாம், மருத்துவர் கு. சிவராமன், விகடன் வெளியீடு.
3. திருக்குறள் மூலமும் உரையும், நர்மதா பதிப்பம், சென்னை.
4. திருக்குறள் கலைஞர் உரை, கலைஞர் மு. கருணாநிதி.